தமிழ்ச்சிட்டு



குரல் 23
இசை 8

சிறுவர்
கலை இலக்கியத்
திங்களிதழ்

தென்மொழி
இணைப்பு
மடங்கல் (ஆகத்து 2000)

மலர்!

செடியில், கொடியில்
மரத்தில் பூப்பாய்
மலரே! மலரே! மலரே! - உன்
சிரிப்பில் உள்ளம்
மகிழா தவர்கள்
இலரே! இலரே! இலரே!

விடியற் காலை
வீதிகள் எங்கும்
மணமே! மணமே! மணமே! - நீ
வீசு கின்றாய்!
என்னே உன்றன்
குணமே! குணமே! குணமே!

புவியில் உன்னைப்
போற்றி மகிழ்ந்தார்!
பூவே! பூவே! பூவே - உன்னைப்
புலவர் யாரும்
பாடி மகிழ்ந்தார்
பாவே! பாவே! பாவே!

குவியல் குவிய
லாகப் பூத்தாய்,
கோடி! கோடி! கோடி! - உன்னைக்
குலவிக் கெஞ்சத்
தும்பிகள் வருமே
நாடி! நாடி! நாடி!

வெள்ளை, மஞ்சள்,
நீலம், சிவப்பு
வண்ணம்! வண்ணம்! வண்ணம்! - உன்னை
விரும்பிச் சூடாப்
பெண்கள் இல்லை;
திண்ணம்! திண்ணம்! திண்ணம்!

பிள்ளைகள் முதலாப்
பெரியோர் வரையில்
உன்னை, உன்னை, உன்னை - என்றும்
பேணி மகிழ்வார்!
பறிக்கச் செய்தாய்
என்னை! என்னை! என்னை!

பாவலரேறு
பெருஞ்சித்திரனார்

நல்லதும் தீயதும்!

கனி இருக்கக் காயினைக்
கவர்ந்து தின்னல் நல்லதோ
இனி திருக்கத் தீயதை
ஏற்றுச் செய்ய நினைப்பதோ?
நிழல் இருக்க வெயிலிலே
நடந்து செல்லு வார்களோ?
குழல் இருக்க இடியினைக்
கேட்டு மகிழு வார்களோ?
வீடிருக்க வெளியிலே
விழுந்து தூங்கப் போவரோ?
நாடிருக்கக் காட்டினை
நாடி வாழல் நல்லதோ?
கிளி இருக்கக் காக்கையைக்
கூட்டில் வைத்துக் காப்பரோ
உளி இருக்க விரலினால்
உருவம் செதுக்க முனைவரோ?
அன்பிருக்க நெஞ்சிலே
அழுக்கு எண்ணம் வைப்பரோ?
பண்பிருக்க விலங்குபோல்
பழகி வாழல் நல்லதோ?
உண்மை இருக்கப் பொய்யினை
உரைத்து வாழல் ஏற்றதோ?
நன்மை இருக்கத் தீமையை
நாடிச் செய்தல் நல்லதோ?

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

– பாவலரேறு

குரல் : 23, இசை : 8

தென்மொழி
மடங்கல்2031 (ஆக.2000)
இதழின் இணைப்பு

நிறுவனர்
**பாவலரேறு
பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:
தாமரை பெருஞ்சித்திரனார்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
'தென்மொழி'
செந்தமிழ அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை - 601 302.
தொலைபேசி எண் : 239 0231

கேள்வியும் பேச்சும்!

நம் இளைஞர்கள் பலருக்கும் ஆங்கிலத்தில் பேசப் பெரிதும் தயக்கம் உண்டு. அதற்குக் காரணம் எங்கே நாம் தவறாகப் பேசி விடுவோமோ அதன் மூலம் நாம் ஆங்கிலம் அறியாதவர் எனப் பிறர் ஏளனமாகக் கருதிவிடு வார்களோ என்ற எண்ணந்தான்.

ஆனால், அப்படியானவர்கள் தமிழில் தவறுதலாகப் பேசுவதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. இன்னும் சொன்னால் தமக்குத் தமிழ் தெரியாதது போல் பேசினால் சிறப்பு என்றுகூட அவர்கள் கருதுவதுண்டு.

நம் இளைஞர்கள் பலர் சிறப்பு 'ழ' கரத்தையே பலுக்குவதில்லை. சொற்களைப் பாதியாகச் சிதைத்து அரைகுறையாகவே பேசுவது அவர்கள் கற்றுக்கொண்ட பாடமாக இருக்கின்றது.

திரைப்பட நடிகர் இரசனிகாந்தின் அரைகுறைப் பேச்சைப் போன்று பேசித் தாமும் அரைகுறைகளாக இருப்பதையே பெருமை என எண்ணுகின்றனர்.

அரைகுறையான பேச்சு நம் ஆழ்ந்த அறிவை வெளிப்படுத்தப் பயன்படாது. நாம் என்ன சொல்ல வருகின்றோம் என்பதே விளங்காமல், நாம் சொல்ல வந்த கருத்தை எவரும் விளங்கிக் கொள்ள முடியாது.

ஒரு செயலைச் செய்வதற்கு அச் செயல் பற்றியான முழு அறிவு நமக்குத் தேவைப்படுவது போன்றே, ஒரு செய்தியைப் பேசுவதற்கு முன்னர் அது பற்றியான முழுமையான அறிதலும் நமக்குத் தேவை.

ஒன்றைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ளாதவர்கள்தாம் அதைப்பற்றி முழுமையாய்ப் பேசாமல் போகின்றனர்.

அப்படி முழுமையாகப் பேசாதவர்கள் முழுமையாய் எதையும் செய்துவிடப் போவதில்லை.

அது போன்றே, நம்மில் பலர் செய்திகளை முழுமையாகக் கேட்பதும் இல்லை.

அரைகுறையாகக் காதில் வாங்கிக்கொண்டு அரைகுறை செயல்களையே செய்கின்றனர்.

காதில் சரியாக விழவில்லை எனில் திரும்பக் கேட்பது போன்று, கருத்தில் சரியாக விழாததையும் நாம் திரும்பக் கேட்டுப் பழகுதல் வேண்டும்.

நம் அறிவைக் கூர்மைப்படுத்திக்கொள்ள நமக்கு நிறையக் கேள்விகள் எழவேண்டும்.

எல்லாவற்றையும் அறிந்து விட்டதாக எண்ணுவது நம்மிடையே அறியாமையைத்தான் வளர்க்கும்.

ஒரு செயலையோ, கருத்தையோ பல கோணங்களில் நாம் கேள்வி எழுப்பி, அறிந்துகொள்ளுகிற போதுதான், அச் செயலில் புதைந்து இண்டு இடுக்குகளில் மறைந்திருக்கிற அறியாமையைக் கண்டு நாம் ஒளிபெற முடியும்.

எதையும் எதற்கு, ஏன் என்று கேள்வி எழுப்பி விளங்கிக் கொள்ளுகிற போதே, அறிவு ஒளி பெறும்.

உலகளவிலும் சரி, நம் தமிழகத்திலும் சரி, அறிஞர்களாய் விளங்கியவர் எவரும் அரைகுறைக் கேள்வி அறிவோ, அரைகுறைப் பலுக்கல் அறிவோ உடையவர்கள் அல்லர்தாமே.

நம் பாவாணர் ஐயா அவர்களும், பாவலரேறு ஐயா அவர்களும் எவ்வாறு அழுத்தந் திருத்தமாய்ப் பேசியவர்கள், அழுத்தந் திருத்தமான கேள்வியறிவு உடையவர்கள் என்பதை நாம் மறந்திடக் கூடாது.

நாம் பின்பற்றத் தகுந்தவர்கள் அவர்களல்லாமல் வேறு அரைகுறைகளையா நாம் பின் பற்ற முடியும்.

தமிழ் மண்ணின் பழமொழிகள் சில . . .

- அத்திப் பூவைப் பார்த்தவரும் இல்லை.
  ஆந்தைக் குஞ்சைக் கண்டவரும் இல்லை.
- ஆலமரம் பழுத்தால்
  வேடன்பாடு கொண்டாட்டம்.
- ஆல் பழுத்தால் அங்கே,
  அரசு பழுத்தால் இங்கே
- எந்த இலை உதிர்ந்தாலும்
  ஈச்ச இலை உதிராது.
- எட்டி பழுத்தென்ன?
  ஈயாதார் வாழ்ந்தென்ன.?
- ஒதியமரம் தூணாகுமோ
  ஒட்டாங் கிளிஞ்சல் காசாகுமோ?
- கருங்காலிக் கட்டைக்கு வாய் கோணாக் கோடாலி
  கதலித் தண்டுக்கு வாய் கோணிற்றாம்.
- பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது.
- பனை நிழலும் நிழலோ,
  பகைவர் உறவும் உறவோ.
- பொங்குங் காலம் புளி,
  மங்குங் காலம் மாங்காய்.

கதிரவக் குடும்பம்

"இந்த உலகக் கூரையின் பால்வெளி மண்டலங்கள், உள்ளிட்ட பிற மண்டலங்களையும் தெரிந்துகொண்டு வந்திருக்கிறோம் இல்லையா?

அதுபோல் இந்தக் கதிரவக் குடும்பமும் வியப்பானதே" என்று எடுத்தவுடன் பேச்சைத் தொடங்கினார் நம்பியின் தந்தை.

பிள்ளைகள் முன்னமே ஓடி வந்து அமர்ந்திருந்தனர்.

"இந்தப் புடவியில் (பிரபஞ்சத்தில்) நிறையக் கதிரவக் குடும்பங்கள் இருப்பதாகவே அறிந்திருக்கிறார்கள்.

நாம் இருக்கிற இந்தக் கதிரவக் குடும்பத்தைப் போன்றே நாம் பார்க்க முடிந்திருக்கிற நம் பால்வெளி மண்டலத்திற்குள் மட்டும் ஏறத்தாழ 130-கதிரவக் குடும்பங்கள் இருக்கின்றனவாம்.

1982 -ஆம் ஆண்டு உருசிய வானியல் அறிஞர்கள்தாம் இதைக் கண்டறிந்துதுள்ளனர்.

ஆனால் இருப்புகள் முழுமையாகத் தெளிவாக்கப் பெறாமல் குழப்பமாகவே இருக்கின்றன.

நம் கதிரவன் இருக்கிறதே அது ஏறத்தாழ நாற்பத்து ஆறாயிரம் இலக்கம் ஆண்டுகளுக்கு முன்னர் அல்லது 460-கோடி ஆண்டுகளுக்கு முன்னர் உருப்பெற்றிருக்க வேண்டுமாம்.

அழுத்தமான குப்பை, வளித் தொகுப்புகளைக் கொண்ட முகில் போன்ற ஒளித்தொகுதியால் உருக் கொண்டதாகவே நம் கதிரவன் இருக்கிறது.

இத் தொகுப்பில் சேராமல் எஞ்சிய குப்பைக் கழிவுகளின் சேர்க்கையாகவே நம் கதிரவனைச் சுற்றிக் கொண்டிருக்கும் கோள்கள் அமைந்தன.

மேலும், நம் கதிரவனில் முழுக்க இருப்பதெல்லாம் என்ன என்று தெரியுமா?

கதிரவ நெருப்புக் கோளத்துள் பெரும்பகுதி எரிவளியே (அயிட்டிரசனே)யே இருக்கிறது.

அந்த எரிவளியே தன்னளவில் உருமாறி உருமாறிக் கதிரவனின் நடுவப் பகுதியில் கதிரம் (ஈலியம்) எனும் தனிப் பொருளாய் அடர்ந்திருக்கிறது."

இவ்வாறு நம்பியின் தந்தை சொன்னதன் பின் மாலையில் மறைந்த கதிரவனின் செங்கதிர் வீச்சுகளைப் பார்த்த படியே குழலியும் எழிலும், இளங்கோவும் நடந்து சென்றனர்.

நீங்கள் நினைத்த எண்ணைச் சொல்லட்டுமா?

மூன்று தொடர் எண்களை எண்ணிக் கொள்ளுங்கள் (சான்றாக 10, 11, 12)
அதில் நடுவில் உள்ள எண்ணை விட்டுவிடுங்கள். (10, 12)
மற்ற இரண்டு எண்களின் மடங்குகளைக் காணவும். (100, 144)
அம் மடங்குகளின் வேறுபாட்டைக் கண்டுபிடியுங்கள். (144 - 100 = 44)

கண்டு பிடித்து விட்டீர்களா?

அந்த வேறுபாட்டைச் சொல்லுங்கள். '44'
அப்படியா விடுபட்ட அந்த எண் என்ன தெரியுமா? 11.
ஆம் வேறுபாட்டை 4ஆல் வகுத்துவிட்டால் விடுபட்ட எண் கிடைத்து விடும்.

எங்கே, உங்களுக்குள் சொல்லிக்கொள்ளுங்கள் பார்க்கலாம்!

சொல்லடை விடை

நெ	டு	ஞ்	செ	ழி	ய	ன்
டு	த		ன்	ம்	த	மா
மா	ங்	க	னி	இ	ரை	ய
ற	க	ம்	ம	ல்		தி
ன்	ம்	பு	லை	ல்	வ	அ

வெறிநோய் பரவாமல் இருக்க . . .

நீந்தத் தெரியாத ஒருவன் மகிழுந்து தூம்பில் (டியூப்பில்) காற்றை நிறைத்து அதை மாட்டிக்கொண்டு அதிக ஆழத்துக்குத் துணிந்து சென்றான். காற்றடைந்த தூம்பின் உதவியால் அவன் நீரின்மேல் மிதக்க முடிந்தது.

திடுமென ஒரு சீல்மீன் நீரின் மேற்பரப்புக்கு வந்து அவனைத் தாக்கியது. இந்த நெருக்கடியில் அவன் முட்டி களால் சீலைத் தாக்கித் தள்ளித் தூம்பை வீரத்துடன் காத்துப் போரிட்டான். தன் உடம்பைப் புற்றி அவன் கவலைப் படவில்லை.

"உதவி! உதவி!" என்று அவன் போட்ட கூச்சல் நீருக்கு மேலே நெடுந் தூரம் வரை சென்று ஒலித்தது.

அண்மையில் படகு ஓட்டிக் கொண்டிருந்த மீன்வர்கள் சிலர் அவனுடைய கூச்சலைக் கேட்டார்கள். அவர்கள் போராட்ட இடம் போய்ச் சேர்ந்த சமயத்தில் சீல் தூம்பை (டியூப்பை)க் கிழித்து விட்டது. குளிப்பவன் கல் போல் மூழ்கியிருப்பான். சரியான நேரத்தில் மீனவர்கள் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டார்கள். அவன் கால்கள் இடிபட்டு அரத்தப் பெருகிக் கொண் டிருந்தது.

மீனவன் ஒருவன் சீலின் தலையில் துடுப்பால் அடித்தான். சீல் நீரில் மூழ்கிக் கரைக்கு நீந்திச் சென்றது. அது கரை ஏறியதும் மீனவர்கள் அதைக் கத்தியால் குத்திக் கொன்றார்கள்.

சீல் மீனின் இந்த வழக்கத்துக்கு மாறான நடத்தைக்கு விளக்கம் கூறும்பட விலங்கியல் துறையினனான என் னிடம் வினவினார்கள். சீல்கள் மக்களைத் தாக்கியதாக முன் நான் கேள்விப்பட்டது இல்லை. ஆதலால் இந்தச் செய்தியில் தலைசிறந்த தேர்ச்சி பெற்றிருந்தவர்களை, வெவ்வேறு கடல்களின் சீல்களை ஆராய்ந் திருந்தவர்களை, நான் உசாவி னேன். அவர்களில் ஒருவரும் எனக்கு உதவ முடியவில்லை.

"சீலுக்கு வெறிநோய் பிடித் திருந்தது. அதற்கு எதிர்ப்பு ஊசி போடுவது இன்றியமையாதது" என்று எண்ணினேன்.

ஆனால் சீலுக்கு வெறி நோய் எப்படி ஏற்பட்டிருக்க முடியும்? கரையில் பாங்கின்றி இயங்கும் சீல் வெயில் காய்கையில் வெறிகொண்ட நரியால் கடிக்கப்பட்டிருக்கலாம். அவற்றிடையே வெறிநோய் பரவியிருந்தது என்பதால் இந்தக் கணிப்பு சரியாகவே பட்டது.

நோயுள்ள விலங்கு நோயற்ற விலங்கைக் கடிக்கும் போதுதான் வெறிநோய் பரவுகிறது. வெறி கொண்ட எலிகளும் சுண்டெலிகளும் பூனைகளும் மற்ற விலங்குகளை அடிக்கடி கடிப்பதுண்டு. வெறி கொண்ட குருவி ஒன்று மற்றொரு விலங்கைத் தாக்கிய விளக்கம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகள் கூண்டில் தனியே வாழ்ந்த ஓநாய் ஒன்று எலி கடித்ததால் வெறி நோய்க்கு உள்ளாயிற்று.

வெறிநோயுள்ள விலங்குகள் எல்லாம் ஒரே சமயத்தில் கொன்று ஒழிக்கப் பட்டால் இந்தக் கொடிய நோயை அறவே போக்கிவிட முடியும். இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக வெறிநோய் அங்கே இப்போது கிடையவே கிடையாது. அந்த நாட்டுக்குள் கொண்டு செல்லப்படும் விலங்குகள் நீண்டகாலம் ஒதுக்கிடத்தில் வைத்து ஆய்வு செய்யப் படுகின்றன.

அறிவு

- அறிவுதான் பணத்தின் பகைவன். உழைப்பின் தோழன்.

  - முனைவர் மு. வரதராசனார்.

- அறிவுணர்வு தீராத நீர்விடாய்!

  அறிவைப் பெறுவதையே ஒருவன் விரும்பிக் கொண்டிராமல், இதுவரை பெற்ற அறிவுக்குரிய செயலைச் செய்து கொண்டே, மேலும் அறிவு பெறுவதுதான் வாழ்க்கைக்குரிய பயனைத் தருவது.

  - பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

- இளமையில் அறிவுத் தேடலில்லாதது தவறு. அகவையான பின்னும் அப்படி இருப்பது மனநோயாளித் தனம்.

- நூலறிவு பெற்றவன் குளத்தைப் போன்றவன்.
  மெய்யறிவு பெற்றவன் சுனையைப் போன்றவன். - கொரேசியா.

இதோ. . .

நாங்கள் வரைந்த ஓவியங்கள்

(நீங்கள் ஒவ்வொருவரும் வரைந்த ஓவியங்களை அனுப்பி வையுங்களேன்)



தமிழன், உடுமலை

அரிமாக் குருளைகள்

அபூர்வ சிங்கக் குட்டிகள்

படத்தில் காணப்பெறுகிற அரிமாவும், அதன் குருளைகளும் உலகில் காண்பதற்கு அரியன.

இவை உலகம் முழுவதிலுமே மொத்தம் ஐந்துதான் உள்ளனவாம். பொதுவாக அரிமாக்களே அரியவைதாம் என்கிறபோது, இந்த வகையினங்கள் மேலும் அரியவானவை.

படத்தில் உள்ளவை இங்கிலாந்து உயிரியல் பூங்காவில் உள்ளன.

இவை எட்டுக் கிழமைகளுக்கு முன்புதான் பிறந்தனவாம்.

ஒட்டகச் சிவிங்கி

எல்லா விலங்குகளையும் கண்டு மாந்தன் வியப்படைவதில்லை. ஆனால் ஒட்டகச் சிவிங்கியைக் கண்டால் மட்டும் தன்னையறியா வியப்பை அவன் உணர் கின்றான். இதன் காரணம் பெரும்பாலும் அதன் நீண்ட கால்களும், கழுத்துமாக இருக்கலாம். உலகிலேயே மிக உயரமான விலங்கு ஒட்டகச் சிவிங்கியேயாகும்.

சில சமயம் இது 18அடி உயரத் தில் உள்ள பொருள் களையும் எட்டிப் பிடிக்கும் தன்மை பெற் றுள்ளது.

மிக நீண்ட நான்கு கால்களும், நீண்ட கழுத்தும் இதன் உயரத்தை அதிகரிக் கின்றன. அதன் நான்கு கால்களும் சம நீளமுள்ளனவாக இருந்தாலும் அதிகம் வளர்ந்துள்ள கழுத்துப் பட்டையிலுள்ள சதை. பின்னங் கால்களைக் குட்டையானவை போன்று செய்கின்றது.

நீண்ட சிறிய தலையும் சிறிய கரிய கண்களும் இவ்விலங்கிற்கு அழகையூட்டு கின்றன.

செவிப்பறைகளோ நீண்டு, மிக மெல்லிய ஒலியையும் கேட்கும் ஆற்றலுடையனவாக உள்ளன. செவிக்குணமும், சுவைக்குணமும் இதற்குள்ள சிறப்புப் பண்புகள் ஆகும்.



இதன் நாவோ ஒன்றரையடி நீளமுள்ளதாகவுள்ளது. இதன் நாவைக் கொண்டு, மிகச் சிறிய முள் செடியிலுள்ள இலைகளையும், சிறிதும் முட்களால் தாக்கமுறாமல் பறித்துண்ணும் ஆற்றல் வாய்ந்தது இவ்விலங்கு.

ஒரு மணி நேரத்தில் 50 அயிர மாத்திரிக்கு (கி.மீ) மேலும் நடக்கும் ஆற்றல் வாய்ந்தது. மிக விரைவாக ஓடும் குதிரையைக் கூடத் தோற்க வைக்கும் ஆற்றல். இது ஓர் அமைதியான விலங்காக இருப்பினும் சண்டையிடும் போது தன் கால்களால் உதைத்தும் தலையால் முட்டியும் பகைவரை வெல்லும் ஆற்றல் வாய்ந்தது. அரிமாகூட ஒட்டகச் சிவிங்கியைத் தாக்கும் போது கவனமாகவே தாக்குகின்றது. ஒட்டகச் சிவிங்கியை நினைத்தவுடன் அதன் நீண்ட கால்களே நமக்கு நினைவுக்கு வரலாம் ஆனால் அதைவிட வியப்புக்குரியது என்ன வென்றால், சிவிங்கியால் ஒலியெழுப்ப இயலாது!

அறிவும் அறியாமையும்

- பாவலர் இளஞ்சித்திரன்

அறிவைத் தம்பீ, அறியப் பழகு
அதுவே மாந்தர் யார்க்கும் அழகு
அறிய, அறிய அச்சம் விலகும்
அதுதரும் வீரம்; தெளிவும் நிலவும்.

அறிவே இயக்கம்; உலகை நடத்தும்;
அதுவே வாழ்வை வளப்பப் படுத்தும்!
அறியா மையோ இருளில் தள்ளும்!
அதுவே முனைப்பின் வேரையே கல்லும்!

வினைகள் செய்ய விடாமல் தடுக்கும்;
வீணில் காலம், நேரம் கெடுக்கும்!
தினையள வேனும் பயன்காட் டாது!
தெள்ளிய அழிவிலா திருப்பது தீது!

அறிவே வெளிச்சம்; பாதை காட்டும்;
அதுகால் களுக்கே வலுவை ஊட்டும்!
அறியா மையோ மூடநம் பிக்கை!
அறிவாய்! அறிவே தன்நம் பிக்கை!

அகவையில் இல்லை அறிவு

தோல்வி கண்டு துயரம் கொண்டு
தளரக் கூடாது - தம்பி
தோல்விக்குத் தோல்வி தருவது முயற்சி
மறக்கக் கூடாது!

சாய்க்கடை நீரும் வாய்க்கால் ஓரம்
தேங்கக் கூடாது - தம்பி
காய்கறி அழுகி இருந்தால் மலிந்தும்
வாங்கக் கூடாது!

குற்றம் கண்டால் நீக்க வேண்டும்
தயக்கம் கூடாது - நம்
சுற்றம் என்பது உயிர்கள் அனைத்தும்
மறக்கக் கூடாது!

அறிவு என்பது அகவையில் இல்லை
மறக்கக் கூடாது - குறள்
நெறியில் வாழக் குவலயத் துள்ளோர்
தயங்கக் கூடாது!

தாய்மொழிக் கல்வி தந்திடும் அறிவு
மறக்கக் கூடாது - வேறு
காய்மொழி கற்றுக் கசடாய் வாழ்வை
ஆக்கக் கூடாது!

துணிந்த பின்னர் தடைகள் உடைக்கத்
தயங்கக் கூடாது - நாம்
பணிந்த செயலால் படிக்கல் ஆனோம்
மறக்கக் கூடாது!

ஆண்ட தமிழினம் அடிமை யாகி
அடங்கக் கூடாது - நம் ஐயா
தூண்டிய விடுதலை வேள்வித் தீயை
மறக்கக் கூடாது!

புதுவை தமிழ்நெஞ்சன்.

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 655/2000 செ.ப. (ஆர்.என்.) எண்: 8119/63 தென்மொழி
டி.என். சீப் பி.எம்.சி 655/2000 செ.ப. (ஆர்.என்.) எண்: 8119/63 தென்மொழி இணைப்பு

சொல்லடை

1			2			
	3				4	5
6		7		8		
	9					
						10

இடமிருந்து வலம்

1. ஆரியப் படைகடந்த பாண்டியன் (7)
6. சேலம் என்றாலே நினைவிற்கு வரும் பழம் (4)
8. தீனி (2)
9 தோடு (4)

வலமிருந்து இடம்

5. திங்கள் (3)
10. திண்பண்டம் (3)

மேலிருந்து கீழ்

1. நின்ற சீர் மன்னன் (5)
2. தமிழகத்தில் உள்ள ஒரு மலை (5)
3. பொன்னுக்கு மறுபெயர் (4)
4. நிலம் (2)

கீழிருந்து மேல்

6. வீட்டு விலங்கு (2)
3. தடை செய் (2)
10. ஔவையார்க்கு நெல்லிக்கனி அளித்தவன் (5)

(விடை 6-ஆம் பக்கம்)